

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் டிட்வா புயலையொட்டி கனமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. உடன் கோ.ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநரும், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் கவிதா ராமு., மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர்.நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் மாவட்ட ஆட்சியர்.எஸ்.ஸ்ரீகாந்த் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கோ.ஸ்டாலின் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. பூங்கொடி, மயிலாடுதுறை நகரக் கழகச் செயலாளரும், நகர்மன்ற தலைவர் செல்வராஜ் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளில்

# நாமக்கல் மேற்கு மாவட்டத்தில் அரசு மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம்!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி அணிவித்தார்!

*நாமக்கல், டிச. 2 -* தமிழ்நாடு துணை முதல்வரும், கழக இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த தினத்தை முன்னிட்டு மாவட்டக் கழகம் மற்றும் நகர திமுக சார்பில் 27 ஆம் தேதி திருச்செங் கோடு அரசு மருத்துவமனையில் பிறந்த குழந்தை களுக்கு நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி தங்க மோதிரம் வழங்கினார்.

தமிழ்நாடு துணை முதல்வரும், கழக இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளில் நாமக்கல் மேற்கு மாவட்டத்தில் அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கப்படும் என மாவட்ட செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட தையடுத்து தங்க மோதிரம் மற்றும் புத்தாடைகள் வழங்கும் நிகழ்ச்சி திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி கலந்து கொண்டு திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் பிறந்த 4 ஆண் குழந்தைகள் 3 பெண் குழந்தைகள் என 7 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் மற்றும் புத்தாடைகள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தி.மு.க. கிழக்கு நகர செயலாளரும், நகர் மன்ற துணைத் தலைவருமான கார்த்திகேயன், திமுக மேற்கு நகர செயலாளரும்,

நகர் மன்ற முன்னாள் தலைவருமான நடேசன், திருச்செங்கோடு நகர மன்றத் தலைவர் நளினி சுரேஷ் பாபு, நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணித்தலைவர் சுரேஷ்பாபு, திருச்செங்கோடு நகர திமுக இளைஞர் அணி செயலாளர் செங்கோட்டுவேல், மாணவர் அணி செயலாளர் தியானேஸ்வரன், நகர துணைச் செயலாளர் மணிகண்டன், முன்னாள் நகர துணைச் செயலாளர் ராஜேந்திரன், நகர அவைத் தலைவர் மாதேஸ்வரன், நகர்மன்ற உறுப்பினர்கள் சினேகா ஹரிஹரன்,

அடுப்பு ரமேஷ் புவனேஸ்வரி உலகநாதன், செல்வி ராஜவேல் சண்முக வடிவு, செல்லம்மாள் தேவராஜன், ரமேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து இளைஞர் அணி மற்றும் மாணவர் அணி சார்பாக தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாளை முன்னிட்டு 49 பேர் ரத்த தானம் செய்தனர்.

# இளந்தலைவா; நீதிக்கட்சியின் தொடர் வரலாறு நீ!



இளந்தலைவா…
சுடரேந்தும்
இந்த கார்த்திகை நாளில்
உனக்கான
தாலாட்டு ஒலிக்கிறது!

புயல்
தாக்கும் கணங்களிலும்
உன் புன்னகை
சேதாரம் ஆவதில்லை!

மாலைகள் சுமக்கும்
உன் தோள்கள் மீது
மலைகளை
கனக்கச் செய்கிறது காலம்!

ஆரூரின்
கொப்பளிக்கும் வெப்பம்
நாடி நரம்புகளில்
எப்பொழுதும்
ஓடிக் கொண்டிருக்கும் உனக்கு!

எங்கிருந்து கற்றாயோ?
உனது
ஓட்டுக் கேட்கும்
உத்தி
ஒருவரும் அறியாதது!

ஒற்றைச் செங்கல்
கொண்டே
பாறைகளை பிளக்கும்
பக்குவம் அறிந்திருக்கிறாய்!

அன்னை துர்க்கையின்
வாழ்த்துகளிலிருந்து மலர்த்துகிறாய்
வாழ்க்கையை!

ஸ்டாலின்
என்பது பெயரல்ல..

பாசிசத்தை
வீழ்த்திய வரலாறு!
பிறப்பே
உனக்கு சிறப்பு!

இருள்
கைவசம் வைத்துக்கொண்டு
காத்திருக்கும்
சனாதனத்தின் பிடரியில்
அறைவதற்கு
நீ
படித்த வரலாறு
நிச்சயம் பயன்படும்!

எதிரிகள்
கணித்த வெற்றிடத்தில்
நிரம்பியிருப்பது
நீதான்!

நூற்றாண்டாய்
விரிந்த
திராவிடத்தின்
ஆழங்களை அதிகப்படுத்து!

கிளைகளின் உயரம்
வேர்கள்
தந்தது!

கலைஞரின்
பேரன் என்பது
பெருந்தகுதி!

நீயோ
இளங் குருதி!


நெருக்கும்
அதிகார குவியலை
உடைக்கும்
பலம் உனக்கு உண்டு!

கிண்டியின்
திமிரை
நீதான் கிள்ளியெறிய வேண்டும்.

நமக்கானத் தடைகள்
எத்தனை உண்டோ
அத்தனையையும் அறிவாய் நீ!

நூலதிகாரத்தை நொறுக்க
நூலாயுதம் தான்
சரி
என்பதால்
அறிவுத் திருவிழாவை
அரங்கேற்றுகிறாய்!

நடேசனார்
நாயர்
தியாகராசர்
முதல்
உனது நாட்களையும்
எதிர் காலத்திற்காக
எழுதிக் கொள்ளட்டும்
வரலாறு!



**வி.உ. இளவேனில்**
கொளத்தூர்



தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட கழக பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி தலைமையில் தலைமை செயற்குழு உறுப்பினர் சி.சியாம் பிரசாத் ஏற்பாட்டில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கழக துணை பொதுச் செயலாளர், அமைச்சர் மு.பெ.சாமிநாதன், அமைச்சர் அர.சக்கரபாணி, கழக கொள்கை பரப்புச் செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி, ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர், தூய்மைப் பணியாளர் நலவாரிய தலைவர் திப்பம்பட்டி ஆறுச்சாமி ஆகியோர் தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர். இதில் மாவட்ட அவைத்தலைவர் இரா.ஜெயராமகிருஷ்ணன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### மதுரை, கோவை மெட்ரோ ரயில் திட்டம் ரத்து!

# தமிழ்நாட்டு மக்களை பா.ஜ.க. வஞ்சிப்பதா?

## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கண்டனம்!

*அரியலூர், டிச. 2 -* அரியலூர் பேருந்து நிலையத்தில் 4 வழித்தடங்களில் புதிய மகளிர் விடியல் பயண பேருந்துகளையும், செந்துறை பேருந்து நிலையத்தில் பல்வேறு வழித்தடங்களில் 5 புதிய மகளிர் விடியல் பேருந்துகளின் சேவையினையும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பல்வேறு வழித்தடங்களில் இயக்கப்பட்டு வந்த பழைய பேருந்துகளுக்கு பதிலாக, புதிய பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது என்றார்.

மின்சார பேருந்து சேவையில் மத்திய அரசுடன் இணைந்து பங்காற்ற, தமிழ்நாடு அரசு மறுத்து விட்டது என்ற மத்திய அமைச்சரின் கருத்து குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு...

மத்திய அரசு மின்சார பேருந்துகள் சேவையை துவங்குவதற்கு முன்பே, நாம் அந்த பேருந்துகளை பயன்பாட்டுக்கு கொண்டு வந்து விட்டோம். GCC என்ற முறையில் ஒப்பந்த அடிப்படையில் இயக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்து சென்னையில் அதனை துவங்கி விட்டோம்.

மின்சார பேருந்துகள் புதிதாக வாங்குவது எனில் மிகுந்த விலை கொண்டது. பராமரிப்பு செலவும் அதிகம். அந்த நிறுவனங்களே பராமரித்தால் தான் சரியாக இருக்கும் என்ற அடிப்படையில் ஒப்பந்தம் வழங்கப்பட்டது.

மெட்ரோ ரயில் விவகாரத்தில் மக்கள் தொகையை காரணமாக சொல்கின்றனர். வட இந்தியாவில் மிக குறைந்த மக்கள் தொகையைக் கொண்ட நகரங்களில் கூட மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது. வாரத்துக்கு வெறும் 80 பேர் மட்டுமே பயணிக்கும் நிலையில் வட இந்தியாவில் சில மெட்ரோ ரயில் சேவை இருக்கிறது.

மத்திய அமைச்சர் மக்கள் தொகையை காரணமாக சொல்கிறார். வானதி சீனிவாசன் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் செயல்படுத்தப்படும் என்கிறார். நயினார் நாகேந்திரன் வேறு காரணத்தை சொல்கிறார்.

பா.ஜ.க.வில் ஒருமித்த கருத்து கிடையாது. தமிழ்நாட்டை ஏமாற்றலாம் என்ற எண்ணத்தில் வெவ்வேறு குரலில் பேசி வருகின்றனர்.

நீட் தேர்வு, புதிய கல்விக் கொள்கை அறிமுகம், மாநில உரிமைகளை பறிப்பதில், சட்டங்களுக்கான அனுமதி கொடுப்பதில் ஆளுநரை வைத்து தடுப்பதில் ஒன்றிய அரசு எப்படி வஞ்சகம் செய்கிறதோ, அதே வஞ்சகத்தோடு இப்போது மதுரை, கோவையில் மெட்ரோ ரயில் திட்டம் அனுமதி தராமல் பா.ஜ.க. நிறுத்தியிருக்கிறது.

இப்படியெல்லாம் செய்தால் தமிழ்நாட்டு மக்கள் பயந்துகொண்டு நமக்கு வாக்களிப்பார்கள் என பாஜக நம்புகின்றது.

இந்தத் திட்டங்களை எல்லாம் நாம் நமது நிதியிலேயே செய்வதற்கான நடவடிக்கைகளை நமது தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார். அதற்கு உதாரணம் கல்வித்துறைக்கு வழங்க வேண்டிய நிதியை கொடுக்காமல் ஏமாற்றிய போது நமது முதலமைச்சர் நம்முடைய முன்னெடுப்பில் அதற்கான இந்திய பயன்படுத்தி நடவடிக்கைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார். ஆக எந்த வழியில் பாஜக தமிழ்நாட்டிற்கு வஞ்சகம் செய்தாலும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அதை எல்லாம் எதிர் கொண்டு நம் தமிழ் மக்களுக்கு செய்ய வேண்டிய அனைத்து விதமான திட்டங்களையும் செயல்படுத்



துவார் என அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் பேசினார்.

### சி, கே, எழிலரசன் ஏற்பாட்டில் துணை முதல்வர் பிறந்த நாள் விழா!

# திருவாரூர் மாவட்ட இளைஞர் அணி சார்பில் குழந்தைகளுக்கு தங்க மோதிரம்!

## பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ. அணிவித்தார்!

*திருவாரூர், டிச. 2 -* தமிழ்நாடு துணை முதல்வர், கழகஇளைஞர் அணி செயலாளர், வருங்கால தமிழ்நாட்டின் நம்பிக்கை உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாவட்ட இளைஞர் அணிகளின் சார்பில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சி.கே.எழிலரசன் ஏற்பாட்டில் திருவாரூர் அரசு மருத்துவமனையில் 27.11.2025 அன்று பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரங்களை மாவட்ட செயலாளர் பூண்டி. கே. கலைவாணன் எம்.எல்.ஏ. அணிவித்தார். மாவட்ட அமைப்பாளர் பணகுடி ஏ.எஸ்.குமார் மற்றும் துணை அமைப்பாளர்கள் முன்னிலை ஏற்றனர்.

திருவாரூர் விஜயபுரம் அரசு தாய் சேய் நல மருத்துவமனையில் நடைபெற்ற துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாள் விழாவில் , மாவட்ட துணை அமைப்பாளர் சி. கே. எழிலரசன் அனைவரையும் வரவேற்றார். நகர கழக செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ் தலைமை வகித்தார்.

பின்னர் நடைபெற்ற நிகழ்வில் மாவட்ட துணை அமைப்பாளர் சி.கே.எழிலாரசன் ஏற்பாட்டில் 27.11.2025 அன்று பிறந்த அனைத்து குழந்தைகளுக்கும் தங்க மோதிரங்களை மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.அணிவித்தார். மாவட்ட அமைப்பாளர் பணகுடி ஏ.எஸ்.குமார் தாய்மார்களுக்கு பரிசு பெட்டக பைகளை வழங்கினார்.

இந்த நிகழ்வில் கூத்தாநல்லூர் நகர செயலாளர் எஸ்.வி.பாக்கிரிசாமி, நகர பொருளாளர் ரஜினி சின்னா, இளைஞரணி அமைப்பாளர்கள் சீரடி ராஜா, ராகுல், பிரகாஷ், ரசின் பைசில் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர். மாவட்ட துணை அமைப்பாளர் கல்யாண சுந்தரம் நன்றி கூறினார்.



குவைத் நாட்டில் கழக அயலக அணி சார்பில் ஒவ்வொரு ஆண்டும் துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர்உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் மிக சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக இந்த ஆண்டு கழக அயலக அணியின் தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி மற்றும் செயலாளர் புதுக்கோட்டை எம்.எம்.அப்துல்லா ஆகியோ வழிகாட்டுதலின்படி இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. இந்நிகழ்வில் 100 க்கு மேற்பட்டோர் குருதிக்கொடை வழங்கினர். முகாமை தொழிலதிபரும் எம்.ஏ.ஹைதர் குரூப் நிறுவனருமான முனைவர், ஹாஜி, எஸ்.எம். ஹைதர் அலி துவங்கி வைத்தார். தாயகத்திலிருந்து அயலக அணியின் தலைவர், டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, அணியின் செயலாளர் புதுக்கோட்டை எம்.எம்.அப்துல்லா, அயலக அணியின் துணைச்செயலாளர்கள் விஜயன் ராமகிருஷ்ணன் எம்.சி, பரிதிஇளம்சுருதி எம்.சி ஆகியோர் காணொளி மூலம் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.



கோவை வடக்கு மாவட்டம், தொண்டாமுத்தூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி வழங்கினார். இதில் பேரூர் கழக செயலாளர் டி.வி.குமார், பேரூராட்சி தலைவர் கமலம் ரவி, துணை தலைவர் மு.ப.நடராஜ் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.